Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்
EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 31

## இலக்கியப் பதிவுகளில் இடம்பெறும் கோவில்களின் சிறப்பு

*சு.காந்திதுரை* [1]
*[1]இணைப்பேராசிரியர் & நெறியாளர், தமிழ்த்துறை, தியாகராஜர் கல்லூரி, மதுரை,*
*சு.தனலெட்சுமி* [2]
*[2]முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்), தியாகராசர் கல்லூரி, மதுரை*
*மின்னஞ்சல்: krishnaalaisravi@gmail.com*
*மின்னஞ்சல்: dlakshmi4148@gmail.com*

## *முன்னுரை*

சங்க காலத்தில் முறையோடு வகுத்து தொகுக்கப்பட்ட மனை நூல்கள் இருந்ததெனச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். "நூலோர் சிறப்பின் முகில் தோய் மாடம் மயன் பண்டிழைத்த மரபினது தான்"[1] சிலப்பதிகாரம் மயமுறையைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

கோயில்களைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியம் விரித்துக் கூறுகின்றன. அவை, புறநானூற்றுப் பாடல் ஒன்று சங்க காலத்தில் 'முக்கட் செல்வனாகிய சிவபிரானுக்கு' அமைந்த கோயிலைக் குறிக்கின்றன.

இன்னப் பிறகோவில்கள் ஆறுமுகம், பலராமன், திருமால் போன்ற தெய்வங்களுக்கு காவிரிப்பூம்பட்டினத்தில் கோயில்கள் அமைந்திருந்ததைச் சிலப்பதிகாரத்தில் அறியப்படுகின்றன.

அன்பு நெறியை வளர்க்க சைவசமய அடியார்கள் உழைத்தனர் கடவுள் மனிதர்களோடு தன்னை ஈடுபடுத்துகிறார் என்பதை உணர்த்த கீதையில் கிருஷ்ணனுடைய அவதாரம் விளக்கப்படுகின்றன.

கி.மு.1500 ஆண்டு அளவில் ஆரியர்கள் என அழைக்கப்படும் ஒரு குழுவினர் மத்திய கிழக்கு ஆசியாவிலிருந்து நாடோடிகளாக ஆடு மேய்ப்பவர்களாக இந்தியாவின் வடபகுதியில் வந்து சேர்ந்தனர். அவர்களுடைய சமய வழிபாடு பலவகைக் கடவுளைக் கொண்டதாக சங்க இலக்கியத்தின் வாயிலாக நாம் அறிகின்றோம். சான்றாக சங்ககால இலக்கியங்களிலும் சமகால இலக்கியங்களிலும் இறைவழிபாடுகள் இருந்து வருவதை இக்கட்டுரை மூலமாக அறியப்படுகின்றன.

## ஆய்வு அணுகுமுறை

பழமையான கோவில்களில் இடம்பெறும் இலக்கியப் பதிவுகள் பற்றி விளக்கிக் கூறும் வகையில் விளக்கவியல் அணுகுமுறையும் (Descriptive Approach) பாடல்களில் இடம்பெற்றுள்ள சமூகவியல் செய்திகளைக் காணும் வகையில் சமூகவியல் அணுகுமுறையும் (Sociological Approach) மற்றும் ஆய்வுக் கருத்துக்களைப் பகுத்துக் கூறும் வகையில் பகுப்பாய் அணுகுமுறையும் (Analytical Approach) இதில் பயன்படுத்தப் படுகின்றன.

## இறைவன் இடம்பெறும் இலக்கியங்கள்

சங்க காலத்தில் மன்னர்களைப் பாடினர். சங்க மருவிய காலத்தில் குடிமக்களைப் பாடும் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்களும் அறத்தை வலியுறுத்தும் நீதிநூல்களும் தோன்றின. பல்லவர் காலத்தில் இறைவனையும் இறையடியார்களையும் பாடினர். விருதப்பா பக்திப்பாவாக மலர்ந்தன.

## காப்பிய இலக்கியத்தில் திருமால் பற்றிய குறிப்பு

சிலப்பதிகாரத்தில் திருமால் வழிபாடுகள் குறித்த செய்திகள் பரவலாக உள்ளன. திருமாலின் அவதாரங்களுள் இராமன் மற்றும் கிருஷ்ணன் பற்றி விளக்கமாகப் பேசப்பட்டுள்ளது. முல்லை நிலமக்களான ஆயர்கள் பாடும் ஆய்ச்சிய குரவை திருமாலின் பெருமைகள் பலவற்றையும் அறியப்படுகின்றன.

*"நுதல்விழி நாட்டத்திரையோன் கோயிலும்*
*உவணச் சேவ லுயர்த்தோ னியமும்"* [2]

*"கன்று குனிலக் கனியுதிர்த்த மாயவன்*
*பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்"* [3]

*"அறுவை யொளித்தா யைர வயறும்"* [4]

பன்னிரு ஆழ்வார்களில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரையும் காலத்தால் முற்பட்டவர்கள் எனக்கருதி முதல் ஆழ்வார்கள் எனப் போற்றுவர். காலம் கி.பி.6 ஆம் நூற்றாண்டு. பொய்கையில் ஐப்பசி திங்கள் திருவோண நாளில் திருமாலின் பாஞ்ச சந்நியம் எனச் சங்கின் அம்சமாகப் பிறந்தவர் ஊர் காஞ்சிபுரம். இவர் பாடியது முதல் திருவந்தாதி. களவழி நாற்பது பாடிய பொய்கையாரும் இவரும் ஒருவரே ஆவார்.

## அரசர்கள் எழுப்பிய கோவில் வரலாறு

அன்பையும் கடவுளையும் இணைத்துப் பார்த்து மகிழ்ந்த நிலையில் 'அன்பினுள் அகப்படும் மலையே' என்றுகூறி மனிதன் வழிபடத் தொடங்கினான். இமய முதல் குமரி வரை எட்டாயிரத்துக்கும் மேலான கோயில்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றன.

*"மூர்த்தி, தலம், தீர்த்தம்*
*குறையாய்த் தொடங்கி னோர்க் கோர்*
*வார்த்தை சொலச் சறிகுருவும்*
*வாய்க்கும் பராபரமே"* [5]

என்பது தாயுமானவர் பாடல், தமிழ்நாட்டில் பாடல் பெற்ற சிவசேத்திரங்கள் 274. பாசுரம் பெற்ற வைணவத் தலங்கள் 108. அதனையே 'நூற்றெட்டு திவ்விய தேசங்கள்' என்பார்கள். மங்களாசாசனம் ஆழ்வார்களால் செய்யப்பெற்ற தலங்கள் என்று குறிப்பிடுவதாகும்.

*"மலர்தலை உலகத்து மரபுநன் கறியப்*
*பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து"* [6]

என்ற பாடல் வாயிலாக கூறப்பட்டுள்ளன.

சிவன் திருக்கோயில்களில் வழிபாட்டு வேளைகளில் தேவாரப் பதிகங்கள் பன்னொடு ஓதுவார்கள் பாடுகையில் ஆடற்கலையும் கற்ற அந்தப் பெண்டிர் அபிநயம் பிடித்து ஆடிப் பரதக்கலையைப் போற்றக் காத்து வந்திருக்கின்றனர்.

## இலக்கியப் பதிவுகளில் இடம்பெறும் கோவில்களின் சிறப்பு

*“தெய்வ மால்வரைத் திருமனி யருள்*
*எய்திய சாபத் திந்திர சிறுவனொடு”* [7]

*“தாதவிழ் புரிகுழன் மாதவி தன்னை*
*ஆடலும் பாடலு மழகு மென்றிக்*
*கூறிய மூன்றி யொன்றுகுறை படாமல்”* [8]

*“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு”* [9]

தமிழகத்தில் சங்க இலக்கியத்தில் சிவபெருமான் ‘ஆலமர் செல்வன்’ என்ற பெயரால் போற்றப்படுகிறார். பழங்காலத்தில் நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர்.

சிவபெருமான் எந்நிலத்திற்கும் கடவுளாகக் கூறப்படவில்லை. ஆத முதற்கடவுள் என்பதாலோ? முருக வழிபாடுதான் முன்னிருந்துள்ளது. மற்ற வழிபாடு எல்லாம் பின் வந்தவைதான் எனச் சொல்லப்படுகின்றன.

பிற்காலப் பாண்டியரது காலத்தில் கி.பி.12-13ஆம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட கோயிலின் பெரும்பான்மையான பகுதிகளில் சுந்தரபாண்டியன் கோபுரம், பராக்கிரம பாண்டியன் கோபுரம் எனச்சில பகுதிகளைத் தவிர எஞ்சிய பகுதிகள் கி.பி.14ஆம் நூற்றாண்டில் நடந்த முகமதியர்களின் படை எடுப்பின்போது அழிந்துபட்டு காணப்படுகின்றன.

*“படையும் கொடியும் குடையும் முரசும்*
*நடைநவில் புரவியும் களிறும் தேரும்*
*தாரும் முடியும் நேர்வன பிறவும்*
*தெரிவு கொளி செங்கோல் அரசர்க்கு உரிய”* [10]

என்ற பாடல் வாயிலாக அரசர்களின் படையும் கொடித்தன்மை முரசும் பற்றி பேசப்படுகின்றன.

கி.பி. 1350-1750 நாயக்க மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் சிற்றிலக்கியங்கள் மிகுதியும் தோன்றின. ‘பிரபந்தம்’ என்ற வடமொழிச் சொல்லை தமிழில் சிற்றிலக்கியங்கள் என்றன.

*“பூவரு பொலன் கழல் பொருவில் மன்னவன்*
*காவலில் ஆணையின் கடவுளாம் எனத்*
*தேவரும் முனிவரும் உணரும்; தேவர்கள்*

*மூவரில் நால்வராம் முன்வந்து எய்தினான்"* [11]

பாண்டியநாட்டு மன்னர்களும் பல்லவ மன்னர்களும் சைவ வைணவத்தை ஆதிக்கம் தொடங்கியமையால் சைவமும் வைணவமும் வேகமாக வளரத் தொடங்கின. சைவத்திற்கு நாயன்மார்களும் வைணவத்திற்கு ஆழ்வார்களும் பக்திப் பாடல்கள் இயற்றிப் பெருந்தொண்டு செய்துவந்தன.

*"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்*
*சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் - சூழும்*
*திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு*
*இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"*

ஆழ்வார்களில் வைணவம் சைவம் என்ற வேறுபாடின்றி திருமாலோடு சிவனையும் இணைத்துப் பாடிய பெருமைக்குரியவர் இவர்சிவன் கோலத்தையும் இணைத்துத் திருமாலாய்க் காணப்படுகின்றார்.

சிலப்பதிகாரம் இலக்கியப் பதிவுகள்

*"கண்ணகி தாதை கடவுளர்கோலத்*
*தண்ணலம் பெருந்தவத் தாசீ வகர்முன்*
*புண்ணிய தானம் புரிந்தரங் கொள்ளவும்*
*தானம் புரிந்தோன் நன்மனைக் கிழத்தி"*

பெரும்பாலான அறிஞர்கள் சிலப்பதிகாரத்தை கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோவிலுக்கு இலங்கைக் கயவாகு வேந்தன் வந்தான். அவன் காலம் இரண்டாம் நூற்றாண்டு என மகாவம்சம் கூறும். எனவே சிலப்பதிகாரமும் இரண்டாம் நூற்றாண்டு என்பர். இலங்கை வரலாற்று நூல் மகாவம்சம் தரும் செய்திகள் பல வரலாற்று முரண்மிக்கவை என்று அறிஞர் குறிப்பிடுகின்றார்.

இராமனைப் பற்றிய குறிப்பு அகநானூற்றில் இடம்பெறினும் இராமன் திருமாலின் அவதாரம் எனக்கூறும் முதல் தமிழ்க்காப்பியம் சிலப்பதிகாரம். கண்ணனின் பெருமை ஆய்ச்சியர் குரவையில் பெரிதும் இடம்பெறுகிறது. புராணக் கதைகளையும் மிகுதியாகக் காணப்படுகின்றன.

செய்யுள் அமைப்பும் சங்க இலக்கிய வடிவத்திலிருந்து மாறுபட்டு அமைகிறது. ஆசிரியப்பா, கலிப்பா, வெண்பா இவற்றால் அமைவது சிலப்பதிகாரம். எளிய சந்த அமைப்பும் பாடற்போக்கும் தோன்ற பக்தி இலக்கியங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன.

சிலப்பதிகாரக் காலத்தில் இசைக் கலைஞர்களும் கணிகையரும் செல்வச்சிறப்போடு விளங்கினர். சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும் காய்தல் உவத்தலின்றிப் படிப்போர் பல சமூக மாற்றங்கள் சிலப்பதிகாரக் காலத்தில் நிகழ்ந்துள்ளமையை அறியமுடிகின்றன.

# முடிவுரை

பண்டைய காலங்களில் பெரும்பாலும் ஆயர்குலத்தவர்கள் இறைவனை நேரடி காட்சிகள் கண்ட செய்திகள் இலக்கியத்தின் வாயிலாக அறியமுடிகின்றன. சைவத்தையும் வைணவத்தையும் அரசர்களும் மக்களும் பல நூற்றாண்டுகளாக போற்றி வந்துள்ளனர்.

கோவில்கள் பற்றிய செய்திகளை பக்தி இலக்கியங்கள் மற்றும் காப்பிய இலக்கியமான கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், சங்க இலக்கியங்கள் இதன் வாயிலாக சமகால கோயில்களின் வரலாறுகளை அறியமுடிகின்றன.

# குறிப்புகள்

1. சு.ஆனந்தன், தமிழிலக்கிய வரலாறு, ப.79.
2. உ.வே.சாமிநாதையர், சிலப்பதிகார மூலமும் உரையும், ப.352.
3. மேலது, ப.442.
4. முனைவர் இரா.நாகசாமி, தமிழகக் கோயிற்கலைகள், ப.1.
5. கோம்பைக்குயில் சாமாண்டிதாசு, தென்பாண்டி நாட்டுத் திருக்கோயில்கள், ப.5
6. தமிழண்ணல், தொல்காப்பயிம், ப.330, நூ.1025.
7. உ.வே.சாமிநாதையர், சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ப.56.
8. மேலது, ப.57.
9. அ.மாணிக்கம், திருக்குறள், ப.10.
10. தமிழண்ணல், தொல்காப்பியம், ப.539, நூ.1570.
11. சாமி.சிதம்பரனார், கம்பராமாயணம், ப.138, பா.4
12. சு.ஆனந்தன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.101.

# துணைநூற் பட்டியல்


1. ஆனந்தன், சு., தமிழ் இலக்கிய வரலாறு, கண்மணி பதிப்பகம், திருச்சி.
2. சாமிநாதையர், உ.வே., சிலம்பதிகார மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லுரையும், டாக்டர். உ.வே.சா. நூல்நிலையம், சென்னை.
3. நாகசாமி, இரா., ஸ்ரீ.ஸ்ரீதர் (பதி.ஆ.), தமிழகக் கோயிற்கலைகள், சென்னை அச்சக தொழிற்கூட்டுறவு சங்கம், சென்னை.
4. மாணிக்கம், அ., திருக்குறள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. சிதம்பரனார், சாமி., கம்பராமாயணம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.